இந்தக் கிராமத்தில் கால்நடை கிளை மருத்துவமனை இருக்கிறது. 'தானே' புயலால் பாதிக்கப்பட்ட எங்களுடைய பகுதிக்கு இந்த மருத்துவமனையை தரம் உயர்த்தி, கால்நடை மருத்துவமனையாக அமைத்துத் தர மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டி ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்பட வேண்டுமென்று சொன்னால் அங்கே 5,000 கால்நடை அலகுகள் இருக்கவேண்டும். தற்போது உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற கிராமத்திலே 4,440 கால்நடை அலகுகள் இருக்கின்றன. எனவே, 5,000 கால்நடை அலகுகளாக உயரும்போது அங்கே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தித் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன் அவர்கள்.*

திரு. எம்.பி.எஸ். சிவசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்வரும் காலத்தில் அங்கே மருந்தகமாக தரம் உயர்த்தித்தரப்படுமென்று கூறியதற்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 159, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

159—

சமுதாயக் கூடம்

*11747—**திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2013 ஏப்ரல் 5]

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், வடபூதானம் ஆதி திராவிடர் காலனியில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிட மக்களின் பாதுகாவலராகத் திகழும் கருணையுள்ளம்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும், 2012-2013 ஆம் ஆண்டு முதல் சமுதாயக் கூடம் கட்டுவதற்கான நிதியினை முன்பிருந்த ரூபாய் 10 இலட்சத்திலிருந்து ரூபாய் 15 இலட்சமாக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-45

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், வடபூதானம் கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 1,483 ஆகும். அதில் ஆதி திராவிடர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் 950 பேர் ஆவார்கள். அதிகமான ஆதி திராவிடர் சமுகத்தைச் சார்ந்தவர்கள் அங்கு குடியிருப்பதால் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவைப்பெற்று சமுதாயக் கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடபூதானம் கிராமத்திலே சமுதாயக் கூடம்

கட்டுவதற்கு உரிய ஏற்பாடு செய்து தருவதாகக் கூறினார்கள். அந்த இடத்தில் போதிய இடம் உள்ளது. ஆகவே, அங்கு சமுதாயக் கூடம் கட்டித்தர வேண்டுமாய் அன்போடு கேட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது நன்றியைக் கூறி விடைபெற்றுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 160, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

160—

மீன்பிடித் துறைமுகம்

***5247—திரு. கு.வ. மார்க்கண்டேயன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திக்குளம் தொகுதி, வேம்பாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விளாத்திக்குளம் தொகுதி, வேம்பாரில் தற்போது மீன்பிடித் துறைமுகம் அமைக்க வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு.வ. மார்க்கண்டேயன் அவர்கள்.*

திரு. கு.வ. மார்க்கண்டேயன்: தமிழகத்திற்கு காவேரித் தண்ணீரை தந்திட்ட உரிமைக் குரல், ஈழத் தமிழர்களின் கண்ணீரைத் துடைத்திட்ட ஒரே விரல் மாட்சிமை பொருந்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வேம்பார் ஊராட்சி, வேம்பார் வடக்கு, வேம்பார் தெற்கு, பெரியசாமிபுரம் ஊராட்சி, வேப்பலோடை ஊராட்சி, கிழக்குக்